# குசேலோபாக்கியானத்தில் இசை

**ஐ. ராம் பிரகாஷ்**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** II

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

தமிழ்மொழி வளர்த்த ஆயகலைகள் அறுபத்து நான்கினுள் இசைக்கலையும் ஒன்றாகும். உயிர்களின் உள்ளத்தைத் திறந்து உயிர்களை ஒருநிலைப்படுத்தி வாழ்விக்கச் செய்கிறது. இக்காரணத்தினால் தான் இந்தக்கலை காலம் கடந்தும் நிலைபெற்றிருக்கிறது. வல்லூர் தேவராசப் பிள்ளையின் குசேலோபாக்கியானத்தில் இடம்பெறும் இசை தொடர்பான கருத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## இசைத் தமிழ்

செய்யுளை இசையோடு பாடுவது இசைத்தமிழ். ஏழு சுரங்களின் (சட்ஜம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம்) (குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்) முதல் எழுத்துக்கள் சரிகமபதநி என்றழைக்கப்படுகிறது. இவற்றில் குறைந்து வருவது ‘திறம்’ என்றும், நெட்டெழுத்துக்கள் ஏழிலும் பயின்று வருவது ‘ஆலோபனை’ என்றும் பெயரிட்டு அழைக்கப்படுகின்றன.

## இசைநூல்கள்

அகத்தியம், இசைநுணுக்கம் (சிகண்டி), இந்திரகாளியம் (யாமளேந்திரர்), குணநூல், கூத்தநூல், செயிற்றியம், தாளவகையோத்து, பஞ்சபாரதீயம் (தேவவிருடி நாரதன்), பஞ்சமரபு (அறிவனார்), வாய்ப்பியம், இசைத்தமிழ்நூல் (குலோத்துங்கன்), இசைத்தமிழ் செய்யுள்துறைக் கோவை (சங்கீத ரத்நாகரம் நிசங்க சார்ங்க தேவர்), யாழ்நூல் (விபுலாநந்த அடிகள்), பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, பெருநாரை, பெருங்குருகு, இறையனார் அகப்பொருள் உரை (சிற்றிசை, பேரிசை) முதலான பல இன்றியமையாத இசைநூல்கள் தற்காலத்தில் அழிந்துவிட்டன.

## இசை வல்லுநர்கள்

வெறும் வாய்பாட்டுக்கு இசைக்கருவிகளின் துணைகொண்டு ஏற்றம்பெறச் செய்பவர் இசைவல்லுநர்கள். இசைக்கருவிகள் வைத்தும், இசைப்போரைப் பொறுத்தும் இவை பலதிறப்பட்டன. பாணன், பாடினி விறலியர், கூத்தர், பொருநர், துடியர், பறையர், வயிரியர், கோடியர் முதலானோர் இசைக்கருவிகளை வைத்து தொன்று தொட்டு பலவகைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

**இசை மறுமலர்ச்சி**

இசைக்கலையில் வல்லவரான திருநீலகண்டயாழ்ப்பாணரின் மரபில் வந்த திருவெருக்கத்தம்புலியூரில் வாழ்ந்த பெண்தான் தேவராத்திற்குப் பண்அடைவு தந்துள்ளார். அதன் பிறகு பல கீர்த்தனைகள் தோன்றின. தமிழிசைச் சங்கத்தையும், தமிழிசைக்கல்லூரியும் நிறுவி அண்ணாமலைச்செட்டியார் இசையில் மறுமலர்ச்சியினைப் புகுத்தினார்.

**இசையும் மன்னர்களும்**

பல்லவர்கால மன்னர்களிடையே இசை குறித்த உணர்வு பேரளவில் ஏற்றம் பெற்றிருந்தது. குடுமியான்மலை சாசனத்தில் மகேந்திரவர்ம பல்லவன் ‘சங்கீர்ணஜாதி’ என்னும் இசைப்பெயரைப் பட்டப்பெயர் பெற்றதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இவன் 18 நரம்புகளைக் கொண்ட யாழினை (பரிவாதினி) புதியதாகக் கண்டுபிடித்தான்.

**இசையும் கோயில்களும்**

இராசசிம்மன் ‘வாத்யவித்யாதரன்’ என்று காஞ்சிகைலாசநாதர் கோயில் கல்வெட்டு கூறுகிறது. கோயில்களில் உள்ள கல்வெட்டு, சாசனம். இன்னம் பிறவாற்றாலும் இசைஉணர்வினை அறிந்துகொள்ள இயலுகிறது.

**இசையும் இலக்கியங்களும்**

சங்கநூல்களில் இசையுடன் கூடியது பரிபாடல். இசை குறித்த அறிவினை விழிப்படையச் செய்த தலையாய நூல் இது. சிலப்பதிகாரத்தில் இசையாசிரியரின் இலக்கணம், இசைப்பாக்களின் தொகுதி நயம்பட இடம்பெற்றுள்ளது. சீவகசிந்தாமணியில் கதைத்தலைவனான சீவகன் காந்தருவதத்தை சுரமஞ்சரியாரிடம் இசைபாடுகிறான். பெருங்கதையில் உதயணன் “கோடபதி” யாழ் வசிப்பதில் வல்லவன். ஸ்ரீபுராணத்தில் காந்தருவத்தையை வசுதேவன் யாழ் வாசித்து இசைபாடி வென்றான் முதலான செய்திகள் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

**குசேலோபாக்கியானமும் இசையும்**

அவந்தி மாநகரக் கோயிலில் நாள்தோறும் தோல், துளை, நரம்பு, கஞ்சம் முதலான வாத்தியங்களின் இசை முழக்கம் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

**‘கடல்மேல் எழுந்து ஆர்த்தாலெனக்**
**கடல்நீர் உறப் பருகி**
**உடன்மேகங்கள் ஆர்த்தாலென**
**உயர்வான் முகடு அதிர**
**மடல்மேல் எழு தார்வானவர்**
**வண்டுந்துபி ஐந்தும்**
**விடல்மேல்உள தாகாவகை**
**மேலும் பெரிது ஆர்த்த’** (கு.பா. 530)

என்னும் பாடலால் கடலின் ஒலியையும் மேகங்களின் ஆர்ப்பையும் தேவருலகமே அதிரும்படியான வானத்தைப்பிளக்கும் வாத்திய முழக்களின் இசைப்பொலியும் பேரொலியாக இருப்பினும் மக்களுக்கு மகிழ்ச்சியினை அது வாரிவழங்கியதாக ஆசிரியர் காட்சிப்படுத்துகிறார்.

**குசேலனின் வியப்பு**

இசைக்கு உருகாதவர் எவருமில்லை என்பதற்கிணங்க, தன்னிலை மறந்து துவாரகையிலிருந்து வந்த குசேலன், இசையொலியில் திளைப்புற்று இருக்கிறான். அப்போது இசைவாத்தியங்கள் முழங்க அவனை வரவேற்றதை,

**‘பெருமதில் வாயில் எய்தப்**
**பிறங்கும்அந் நகரத்து உள்ளார்**
**அருமைசால் களிப்பு பொங்க**
**அமைந்தகை யுறைக ளோடும்**
**திருமலி மங்க லங்கள்**
**சிறப்புற ஏந்திக் காரும்**
**வெருவுபல் லியம்இ யம்ப**
**விரைந்தெதிர் கொள்ள வந்தார்’** (கு.பா.568)

என வரும் பாடலடிகளால் அறியமுடிகிறது.

**குலேசனுக்கு வரவேற்பு**

**‘நல்லியல் மங்க லங்கள்**
**நான்மறை யவர்கள் பாட**
**அல்லிஅம் கமலக் கண்ணற்கு**
**அன்புளான் வீதிவந்தான்’** (கு.பா.570:4-8)

என்ற வரிகளால் கண்ணனுக்கு அன்புள்ளவனான குசேலனை மங்கல வாத்தியங்கள் முழங்க, மறையவர்கள் பாடி வரவேற்பளித்ததை உணரமுடிகிறது.

**வீணை இசை**

கண்ணனின் அரண்மனையில்,

**‘மாடகம் திரித்து**
**நல்லி யற்படு வீணையின்**
**நரப்பொலி எழுப்ப’** (கு.பா.373:6-8)

என்று கூறுமளவிற்கு வீணையை காளிந்தி என்ற பெண் மீட்டிக்கொண்டு இருக்கும் இசையை குசேலன் கேட்டான்.

**முடிவுரை**

பண்டைக்காலத்தில் இசை அனைத்து மக்களுக்கும் உரியதாக இருந்தது. இடைக்காலத்தில் மன்னர்க்குரியதான தமிழிசையில் ஆட்சி மாற்றத்தால் கர்நாடக இசை, இந்துஸ்தானி, மேலைநாட்டு இசை முதலானவை புகுந்து மாறுதல்களைப் புகுத்தி வருகின்றன. இத்தகைய நிகழ்வுகள் குசேலோபாக்கியானத்திலும் இருந்திருப்பதை ஆசிரியரின் (வல்லூர்தேவராசப்பிள்ளை) பாடல்களின் வாயிலாக உய்த்துணரமுடிகிறது.